ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2024 மே 28 |

## நாணயக்கொள்கை மீளாய்வு: இல. 03 - 2024 மே

## இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுகின்றது

*இலங்கை மத்திய வங்கியின் நாணயக்கொள்கைச் சபையானது 2024 மே 27ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 8.50 சதவீதம் மற்றும் 9.50 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது. நடுத்தர காலத்தில் பணவீக்கத்தினை 5 சதவீதம் கொண்ட இலக்கிடப்பட்ட மட்டத்தில் பேணுகின்ற அதேவேளை பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றலை அடைவதற்கு ஆதரவளிக்கும் நோக்கில் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பக்கங்கள் மீதான தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் சாத்தியமான இடர்நேர்வுகள் என்பவற்றினைக் கவனமாக மதிப்பீடு செய்ததன் பின்னர் சபை இத்தீர்மானத்தை மேற்கொண்டது. நடுத்தர கால பணவீக்கத் தோற்றப்பாடானது தற்போதைய கொள்கை வட்டி வீத மட்டத்துடன் தொடர்ந்தும் ஒத்திசைந்து செல்வதுடன் பணவீக்க எதிர்பார்க்கைகள் நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ள போதிலும், உள்நாட்டு நாணய நிலைமைகளின் தளர்வு மற்றும் உள்நாட்டுப் பொருளாதார மீட்சி என்பவற்றிற்கு இன்றியமையாததாக விளங்குகின்ற கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் ஏனைய அடிப்படை வட்டி வீதங்கள் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களில் மேலுமொரு குறைப்பிற்கான தேவையை சபை அவதானத்திலெடுத்தது.*


**தற்காலிக தளம்பல்களுக்கு மத்தியில் முதன்மைப் பணவீக்கமானது இலக்கிடப்பட்ட மட்டங்களை நோக்கி நடுத்தர காலத்தில் ஒருங்கிணைந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது**

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொ.நு.வி.சுட்டெண், 2021=100) ஆண்டிற்காண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமானது உணவல்லாப் பணவீக்கத்தில் ஏற்பட்ட துரிதப்படுத்தலின் காரணமாக 2024 மாச்சில் பதிவுசெய்யப்பட்ட 0.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஏப்பிறலில் 1.5 சதவீதத்தினைப் பதிவுசெய்வதற்கான சில சிறியளவிலான உயர்வுகளைக் காட்டியது. இருப்பினும், உணவு மற்றும் உணவல்லா ஆகிய இரண்டு விலைகளும் மாதத்திற்கு மாத அடிப்படையொன்றில் வீழ்ச்சியடைந்தன. 2024 சனவரியில் மேற்கொள்ளப்பட்ட பெறுமதிசேர் வரித் திருத்தங்களின் மூலம் தூண்டப்பட்டு பணவீக்கத்தில் ஏற்பட்ட சிறியளவிலான உயர்வுகள் மின்சாரத் தீர்வைகள், மற்றும் எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய எரிவாயு விலைகள் என்பவற்றிற்கான கீழ்நோக்கிய திருத்தங்கள் மூலம் துணைபுரியப்பட்டமை அண்மைய விலை அபிவிருத்திகளினால் பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டுள்ளதனைப் பணவீக்கத்தில் ஏற்பட்டுள்ள அண்மைய அசைவுகள் குறித்துக்காட்டுகின்றன. மேலும், உணவு விலைகளில் ஏற்பட்ட மிதமடைதல் மற்றும் குறைவடைந்த கேள்வி நிலைமைகள் என்பனவும் தாழ்ந்தளவிலான பணவீக்க மட்டத்திற்குப் பங்களித்தன. அதேவேளை, பொருளாதாரத்தின் அடிப்படைக் கேள்வி அழுத்தங்களைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கமும்

பொருளாதாரத்தின் தாழ்ந்தளவிலான கேள்வி அழுத்தங்களைப் பிரதிபலித்து மெதுவடைந்த மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டது. சில மேல்நோக்கிய இடர்நேர்வுகள் தொடர்ந்தும் காணப்படுகின்ற போதிலும் நிர்வகிக்கப்பட்ட விலைச் சீராக்கங்கள் மற்றும் தளர்த்தப்பட்ட உணவு விலைகள் என்பவற்றின் இணைந்த தாக்கத்தின் காரணமாக எதிர்வருகின்ற மாதங்களில் முதன்மைப் பணவீக்கமானது 5 சதவீதம் கொண்ட இலக்கிடப்பட்ட மட்டத்திற்குக் கீழாகக் காணப்படக்கூடுமென்பதனை வருகின்ற தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இருப்பினும், பொருத்தமான கொள்கை வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டு பணவீக்கமானது இறுதியாக இசைந்து செல்லுமெனவும் நடுத்தர காலப்பகுதியில் இலக்கு மட்டத்தினை அண்மித்துத் தொடர்ந்து காணப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்**

**கொ.நு.வி.சுட்டெண்* (காலாண்டு சராசரி, ஆண்டிற்காண்டு, %)**




*மூலம்: மத்திய வங்கியின் அலுவலர் எறிவுகள்*

* வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 கா4 வரையான அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்ட) அடிப்படையிலமைந்துள்ள வேளையில், இக்காலப் பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்ட) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் 2024 மே மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாகவுள்ள சகல தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன.

*குறிப்பு: வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப்பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் பணவீக்கம் தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றது. உதாரணமாக, தடிப்பான பச்சை நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளிகளை எடுத்துக்காட்டி உண்மையான பணவீக்க விளைவு இவ்விடைவெளிகளினுள் அமையப்பெறும் என்ற 50 சதவீத நிகழ்தகவினை உணர்த்துகின்றது. நம்பிக்கை இடைவெளிகள் நீண்ட காலத்தில் பணவீக்கத்தின் எதிர்வுகூறலின் அதிகரிக்கின்ற நிச்சயமின்மையினைக் காட்டுகின்றன.*

**குறிப்பு: எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல.**

2024 மே மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கப்பெறுகின்ற தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் படிப்படியான வளர்ச்சி மீட்சி, படுகடன் மறுசீரமைப்புச் சூழ்நிலையின் கீழான பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி எறிவுகளுடன் இசைந்து செல்லும் விதமாக எதிர்பார்க்கப்படுகின்ற உள்நாட்டு இறைப் பாதை மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் நாணயக்கொள்கை நிலையினால் குறித்துக்காட்டப்படுகின்ற உலகளாவிய நிதியியல் நிலைப்பாடுகள் போன்ற எதிர்வுகூறல்களின் மீதான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். மேலும், எறிவுகள் மாதிரியுருவிற்கு ஒத்திசைவான வட்டி வீதப் பாதை மற்றும் தோற்றம் பெறுகின்ற பேரண்டப்பொருளாதார பதிலிறுப்புக்கள் என்பன மீதான நிபந்தனைகளுக்குட்பட்டவையாகும். இவ்வூகங்களில் காணப்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து அடையப்பட்ட பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும்.

நிச்சயமற்றதன்மைக்கு மத்தியில் உலகளாவிய வலு விலைகள் மீதான சாத்தியமான மேல்நோக்கிய அழுத்தங்களின் தாக்கம் வேளாண்மை உற்பத்தியில் பாதகமான வானிலையின் தாக்கம் மற்றும் அதன்மூலமான உணவு விலையில் தாக்கம்; மின்சார தீர்வைக்கான சாத்தியமான மேல்நோக்கிய திருத்தங்கள்; எறிவுகளில் கருத்திற்கொள்ளப்பட்ட மட்டங்களிலும் பார்க்க அதிகளவிலான செலாவணி வீத பெறுமானத் தேய்வு போன்ற காரணிகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற பணவீக்க எறிவுகளிற்கான மேல்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. அதேவேளை, பணவீக்க எறிவுகளுக்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் பொதுமக்களின் குறைவடைந்த கொள்வனவுச் சக்தியின் தொடர்ச்சியான தாக்கம் மற்றும் நிரம்பல் நிலைமைகளின் மேலதிக தளர்வடைதல் என்பவற்றினை உள்ளடக்குகின்றன.

பணவீக்கத் தோற்றப்பாட்டிற்கான ஏதேனும் மாற்றங்கள் பற்றி கிரமமானதோர் அடிப்படையில் பொது மக்களுக்குத் தொடர்பூட்டி தகவலறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு அவர்களை இயலச் செய்வதற்கு மத்திய வங்கி அர்ப்பணிப்புடனுள்ளது.

**சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களில் மேலதிக வீழ்ச்சி தேவைப்படுத்தப்படுகின்றது**

இதுவரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கைத் தளர்த்தல் வழிமுறைகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் ஒட்டுமொத்த சந்தை வட்டி வீதக் கட்டமைப்பானது கீழ்நோக்கிச் சீராக்கப்பட்டுள்ளது. அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து, தற்போதைய கொள்கை வட்டி வீத மட்டத்துடன் மேலும் ஒத்திசைந்து காணப்பட்டன. அடிப்படை வட்டி வீதங்களின் மிதமடைதலுடன் இணைந்து அண்மைய மாதங்களில் வங்கித்தொழில் துறையின் சராசரி வைப்பு வட்டி வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன், ஒட்டுமொத்த கடன்வழங்கல் வட்டி வீதங்கள் எதிர்வருகின்ற காலப்பகுதியில் கீழ்நோக்கிச் சீராக்கப்படுவதற்கான மேலதிக இடைவெளி உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் சாதனங்கள் மீதான உயர்த்தப்பட்ட வட்டி வீதங்கள் ஒட்டுமொத்த வட்டி வீதக் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் இன்னும் கீழ்நோக்கிச் சீராக்கப்படவில்லை. குறிப்பிடத்தக்க நாணயக் கொள்கைத் தளர்த்தல் மற்றும் ஒட்டுமொத்த திரவத்தன்மை நிலைமைகளில் மேம்பாடு என்பன காணப்பட்ட போதிலும் தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சல்கள் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் சிறியளவிலான விரிவாக்கமொன்றினை மாத்திரம் பதிவுசெய்துள்ளன. சில்லறைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களின் மீதான மேலதிக குறைப்பானது தனியார் துறைக் கொடுகடனில் உயர்வொன்றினை வசதிப்படுத்தக்கூடுமென்பதுடன் அதன்மூலம் பொருளாதார நடவடிக்கைகளின் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற மீட்சி ஆதரவளிக்கப்படும்.

**வெளிநாட்டுத் துறை மேலும் வலுவடைந்தது**

உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையானது அண்மைய மாதங்களில் உத்வேகமடைந்துள்ளமையினால், ஒன்றுசேர்ந்த வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது 2023இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024 ஏப்பிறலில் முடிவடைகின்ற நான்கு மாத காலப்பகுதியில் விரிவடைந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய உட்பாய்ச்சல்களினால் ஆதரவளிக்கப்பட்டு, பணிகள் துறை அண்மைய மாதங்களில் குறிப்பிடத்தக்க தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்த வேளையில் தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்பட்டன. அதிகரித்தளவிலான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களுக்கு மத்தியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கணிசமானளவிலான தேறிய கொள்வனவுகளினால் ஆதரவளிக்கப்பட்டு, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2024 ஏப்பிறல் இறுதியளவில் ஐ.அ.டொலர் 5.5 பில்லியன் தொகைக்கு (சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதி உள்ளடங்கலாக) குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. அதேவேளை, இலங்கை ரூபாவானது 2024இன் இதுவரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலரிற்கெதிராக ஏறத்தாழ 8.0 சதவீத ஒட்டுமொத்த உயர்வொன்றினைப் பதிவுசெய்தது.

**கொள்கை வட்டி வீதங்கள் அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணப்படுகின்றன**

மேலே எடுத்துக்காட்டப்பட்ட தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நாணயக்கொள்கைச் சபையானது 2024 மே 27ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 8.50 சதவீதம் மற்றும் 9.50 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவது பொருத்தமானதொன்றாகக் காணப்படுகின்றது என அபிப்பிராயப்பட்டது. தற்போது நிலவுகின்ற தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலைப்பாடு மற்றும் நிதியியல் நிறுவனங்களின் நிதியங்களின் செலவில் ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான வீழ்ச்சி

என்பவற்றினைக் கருத்திற்கொண்டு சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் மேலும் வீழ்ச்சியடைவதற்கான இடைவெளி தொடர்ந்தும் காணப்படுவதாக சபை குறித்துக்காட்டியது. தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளின் பலன்களைக் கடன்பெறுநர்களுக்கு மேலும் தாமதமின்றி ஊடுகடத்த வேண்டியதன் அவசியத்தைச் சபை மீள்வலியுறுத்தியது. நாணயக்கொள்கைச் சபையானது உள்நோக்கி வருகின்ற தரவுகளைத் தொடர்ந்தும் அவதானித்து, ஏனையவற்றிற்கிடையில் பணவீக்கத் தோற்றப்பாட்டிற்கான இடர்நேர்வுகளைத் தொடர்ந்தும் மதிப்பீடு செய்யுமென்பதுடன் எதிர்வருகின்ற காலப்பகுதியில் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணும் பொருட்டு பொருத்தமான வழிமுறைகளை மேற்கொள்ளும் வேளையில் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றலை அடைவதற்கு ஆதரவளிக்கத் தயாராகவிருக்கும்.

| | | |
|---|---|---|
| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் நியதி ஒதுக்கு வீதம் என்பன மாற்றமடையவில்லை** | |
| | துணைநில் வைப்பு வசதி வீதம் | 8.50% |
| | துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 9.50% |
| | நியதி ஒதுக்கு விகிதம் | 2.00% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் முனைவர் பி. நந்தலால் வீரசிங்க அவர்களின் தலைமையிலான ஊடக மாநாடு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் 2024 மே 28ஆம் திகதி மு.ப 11.30 மணிக்கு நடைபெறுவதுடன் முகநூல் மற்றும் யு ரியூப் என்பவற்றின் வாயிலாக நேரலையாக இடம்பெறும்.

நாணயக் கொள்கை மீளாய்வு மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2024 யூலை 24ஆம் நாளன்று வெளியிடப்படும்.

*** தரவு இணைப்புப்** பெறுவழி: https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/mpr03_2024_t.pdf